**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.121/2016** **தேதி.06.11.2024**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. துர்காதேவி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு 06.11.2024ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெயபிரகாஷ் |
| த/பெ. | : | தாமோதரன் |
| வயது | : | 49/2024 |
| தொழில் | : | விவசாயம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | பாகவெளி |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். 03.01.2009 அன்று சேஷாத்திரி மனைவி கல்யாணி என்பவருக்கு முருகேசன் என்பவருக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தப் பத்திரத்தின் அசல் **வா.த.சா.ஆ.1** ஆகும். நான் எனது வழக்கறிஞர் மூலம் 06.07.2015 அன்று பிரதிவாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு **வா.த.சா.ஆ.2** ஆகும். மேற்படி அறிவிப்பினை 1, 2, 3 மற்றும் 5 ஆகிய பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டைகள் **வா.த.சா.ஆ.3** ஆகும். 17.02.2024 அன்று கல்யாணி கணவர் சேஷாத்திரி என்பவர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத பவர் பத்திரத்தின் அசல் **வா.த.சா.ஆ.4** ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி

பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை:– ஒத்திவைக்கப்படுகிறது.**